வேதாந்தம் - வழி நூல்கள்

20-3

ஸ்ரீ சங்கரபகவத்பாதர்கள் அருளிய

# கௌரீ தசகம்



கிரி ப்ரஸ், பப்ளிஷர்ஸ், திருவல்லிக்கேணி, சென்னை.

6315
R65(வேத)

2717

॥ श्रीः ॥

श्री शंकरभगवत्पादैर्विरचितं

गौरीदशकम्

ஸ்ரீ:

ஸ்ரீ சங்கரபகவத்பாதர்கள் அருளிய

# கௌரீ தசகம்

ஸ்ரீ வே. நாராயணன், எம்.ஏ., எம்.எல்.

செய்த தமிழ் ப்ரதிபதத்துடன்

கோவிலூர் ஆண்டவர்
A. No. 6315
R65 (வெ)
நூலகம், கோவிலூர்

கிரி ப்ரஸ், பப்ளிஷர்ஸ், திருவல்லிக்கேணி.

பதிப்புரிமை]

[விலை அணா 8

FIRST
EDITION
*Sept. '48*

GIRI PRESS

*Printed & Published*
by K. Kylasamier
at GIRI PRESS,
Triplicane – Madras.

20-3

KOVILOOR MADALAYAM
கோவிலூர் 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE 486846)

மனிதன் பரமனைக் குறித்துத் துதித்த பதிகங்கள் பலகோடி. ஆயினும் அவைகளுள் ஆசார்ய சங்கரர் அவர்களது துதிகள் முன்னணியில் நிற்பதற்குக் காரணம் அப்பதிகங்களின் சொல் நடையும் ஆழ்ந்த அர்த்த புஷ்டியுமே. ரஸமான ப்ராஸங்களிடையே ததும்பும் தத்துவங்கள் பொருளுக்கேற்றவாறு ஒலிக்கும் பதங்கள், ஒன்றையொன்று கட்டித்தழுவி சொற்கட்டுடன் அமைந்த அடிகள் இவையனைத்தையும் மூழ்கடிக்கும் பக்திப் பிரவாகம் இவையே ஆசார்யரது துதியின் லக்ஷணங்கள். இந்த கௌரீ தசகம் இதற்கு விலக்கு அன்று. அடிக்கு பதின்மூன்று எழுத்துகள் கொண்ட மத்தமயூர விருத்தத்தில் அமைந்துள்ளது. மதங்கொண்ட மயில் ஆடுவதை நினைப்பூட்டும் இந்த ச்லோகங்கள் படிக்கப் படிக்கத் தெவிட்டாதவை. மனதிற்கு உற்சாகமூட்டி, பக்தியைப் பெருக்கி, பக்தர் என்னும் மயில் கூட்டத்தை ஆனந்தத்துடன் ஆட வைக்கும் பாடல் இது. சொல்லளவிலேயே கேட்டுக்களிகொள்ளும் மக்கள் இதன் பொருளையும் அறிந்தால் மிகப் பயன்பெறுவர் என்று கருதியே நான் இதை வெளியிட்டிருக்கிறேன். என் முயற்சி வெற்றிபெற அன்னை கௌரீ தேவி அருள் புரிவாளாக.

K. கைலாஸமய்யர்.

பதிப்பாளர்

# முன்னுரை

"பரம்பொருள் ஆணு, பெண்ணு? ஒன்ரு இரண்டா? இரண்டானுல், அவற்றுள் மேம்பட்டது எது?" என்றெல்லாம் ஆஸ்திகர்களுக்கும் ஐயப்பாடு தோன்றுகின்றது. அப்பொழுது "அது ஆணும் அன்று; பெண்ணுமன்று; அல்லாத அலியும் அன்று; இரண்டும் அன்று; ஒன்றும் அன்று; விட்டுப் பிரியாத இரட்டை; இவ்விரட்டையுள் வேறுபாடோ பாகுபாடோ இல்லை. ஈருருவமும் ஒன்றியே இருக்கும்" என்று நமக்கு அறிவூட்டுகின்றனர் நம் பெரியோர்கள். உண்மையில், பரம்பொருள் அளவுடைய ஐம்புலன்களாலும் ஆருவது புலனுன மனத்தாலுமே அறிய வொண்ணுதது; ஆனுல் உயிர்களைக் காக்குந் தொழிலை மேற்கொண்டு அப்பரம்பொருள் நாமரூப மற்றதாயினும் நாமரூபங்களை மேற்கொண்டு நமக்குக் காட்சியளிக்கின்றது: நாமரூபமற்ற பரம்பொருளை பரமசிவன் என்றும் நாமரூபங்களை மேற்கொண்ட பரம்பொருளை சிவசக்தி யென்றும் கூறுகிருர்கள். இந்த சிவசக்தியும் பரம்பொருளின் ஸ்வரூபமாதலால், அவள் நித்தியப் பொருளாய் ஊழிக்காலத்திற்குப் பின்பும் மீண்டும் சிருஷ்டி தொடங்குமுன்பும் இருக்கிருள். பரமசிவனுக்கு இலக்கணம் 'ஸத்' 'ஆனந்தம்' என்பவை யென்ருல் சிவசக்தியின் இலக்கணத்தை 'சித்' என்று கொள்ளலாம். இந்த சுத்தசைதன்யமே உலகிலுள்ள சைதன்ய வஸ்துக்களை

20-3



யெல்லாம் ஈன்றது; அவையனைத்துள்ளும் புகுந்து அவற்றை இயங்கச் செய்கின்றது; இதனையே ஜகத் காரண வஸ்துவாக யோகிகள் தியானஞ் செய்து ஒளிப்பிழம்பாக ஸமாதி நிலையிலே கண்டு களிக்கிறார்கள். இதுவே பெண்ணுருக்கொண்டு மலைமகளாக அவதரித்து, சந்திரமௌளி வடிவங் கொண்ட பரம சிவனை மணந்து, உலகங்கள் அனைத்தையும் பரிபாலிக்கும் இராணியாகி, இந்திரன் முதலான தேவர்கள் அனைவரும் திருவடி தொழுமாறு வெள்ளி மலையிலே பரமசிவனுடைய சரீரத்திலே பாதிப் பாகத்தைத் தன்னுடையதாக்கிக்கொண்டு வீற்றிருக்கிறாள். சப்தப் பிரும்ம வாதிகள் இவளை அக்ஷரஸ்வரூபிணியாகக் கொண்டு, உயிர்கள் எல்லாவற்றையும் படைத்த தாயாராக வழிபடுகிறார்கள். இவளையே ஸ்ரீ வித்யோபாஸகர்களும் மூலாதாரத்தினின்றும் ஆறு கமலங்களிலும் ஒளி வடிவங்கொண்டு வியாபித்து, எங்குந் தானேயாய் இன்பமயமாய் அறிவிலே அறிதற்குரியவளாய் விளங்குவதைக் காண்கிறார்கள். பரம்பொருள் முத்தொழிலையும் இவளைக் கொண்டே செய்வித்து இவளை உபாசித்தே பேரின்பத்தைப் பெறலாம் என்று சொல்லாமற் சொல்லுகின்றது. "சர்வ வல்லமை பொருந்திய தேவி இட்டது சட்டமன்றோ? அவளைப் பரம நீசனாகிய நான் என்ன செய்து அடைவேன்? அவளை வழிபடுவதற்கு நான் யார்? அவள் எவ்விடத்தாள்?" என்று ஏக்கமுறவேண்டியதில்லை. ஏனென்றால் அந்த பராசக்தியே தன்னை எல்லோரும் எளிதிலே வழிபட வேண்டும் என்று கருணை கூர்ந்து தன்னு

டைய மூர்த்திகளை ஆங்காங்கே பரப்பிவைத்துள்ளாள். அம்மூர்த்திகளுள் உங்களுக்குக் கிட்டிய தொன்றைப் பரதேவதையாகப் பாவனை செய்து, அடக்கவொடுக்கமாய் பயபக்தியுடன் இடைவிடாது துதித்து வந்தால், வாழ்க்கைப் பயனை முற்றும் பெறலாம்.

இவ்வாறு, பரம ரகசியங்களான தத்துவங்களைச் சிற்றறிவினர்க்கும் எளிதில் விளங்குமாறு ' கௌரிதசகம் ' என்னும் பதிகத்தாலே கௌரீதேவியைத் தாம் ஸ்துதிக்கும் பாவனையிலே உபதேசித்திருக்கிறார்கள் அழுக்கு நாக்கொடு புன்கவி சொன்னாலும், புனித ரிக்குகளாலே போற்றும் புண்ணிய மூர்த்திகளுக்கு அருளுகின்ற திருவருளையே அவர்களுக்கும் அளிக்கின்ற இயல்புடையவள் ஆதலால், பரம காருண்யத்தாலே பரமாசார்யர்கள் நமக்கென்று இயற்றியருளிதாய் வாய்வந்தவாறு உச்சரித்தாலும் நற்பயன் தரவல்ல "கௌரீதசக"த்தை காலையில் எழுந்து மெய், வாக்கு, மனம் என்னும் முக்கரணங்களையும் சுத்தமாக்கிக்கொண்டு பக்தியோடு பாடுவோர் உயர்வற்ற உயர் நலன்களையெல்லாம் பெறுவார்கள் என்பது திண்ணம்.

வே. நாராயணன்.



श्री गौरी

ओंकारपंजरशुकी-मुपनिषदुद्यानकेलिकलकण्ठीम् ।
आगमविपिनमयूरी-मार्यामन्तर्विभावये गौरीम् ॥

श्री:

## ॥ गौरीदशकम् ॥

ஸ்ரீ:

# கௌரீதசகம்

॥ गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥

" கருணைபொழியும் தாமரைக் கண்களையுடைய என் தாயாரான கௌரீதேவியை நான் போற்றுகிறேன் " என்று ஒரு முறைக்குப் பன்முறையாக போற்றித் துதிப்பதற்கு ஏற்றதாய் ஸ்ரீ சங்கரபகவத் பாதர்கள் நமக்குத் திருவாய்மலர்ந்தது, கௌரீதசகம் என்னும் ஸ்தவம். இந்த கௌரீதசகத்தை, விடியற் காலையிலே தூயமனத்தோடு நன்றாகத் தியானஞ் செய்து பக்தி சிரத்தையுடன் பிரதி தினமும் எவர்கள் பாராயணம் செய்கிறார்களோ, அவர்களுக்கு நிச்சயமாய் பார்வதி தேவி வாக் சித்தியையும், சகல செல்வங்களையும் சிறந்த சிவபக்தியையும் அளிக்கிறாள் என்று ஜகத்குருவே அறுதியிடுகிறார். ஒவ்வொரு சுலோகத்திற்கும் நான்காம் அடியாக, गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे " கௌரீ

மம்பாமம்புருஹாக்ஷீமஹமீடே" என்னும் மகுடம் அமைந்துள்ளது. அதாவது: அஹம் = நான் அம்புருஹாக்ஷீம் = தாமரைக் கண்களையுடையவளாய் அம்பாம் = என் தாயாராக விளங்கும் கௌரீம் = கௌரீ தேவியை ஈடே = துதி செய்கிறேன். இந்த கௌரீ பதிகத்தை பாலப் பருவம் முதற்கொண்டு பிரதி தினமும் விடியற்காலையிலே சொல்லித் துதித்து வந்தால், உலகனைத்தையும் ஈன்று வளர்க்கும் நம் அன்னை உண்மையான வித்தையையும், சொன்ன சொல் பலிக்கும்படியான சக்தியையும், சர்வ ஐச்வர்யத்தையும், சக்தியையும் செல்வத்தையும் சிவார்ப்பணமாக்கும் பக்தியையும் கொடுத்து, உரிய காலத்திலே பரமனடி நிழலை அடையும்படி உதவுகிறாள்.

20—3



लीलालब्धस्थापितलुप्ताखिललोकां
लोकातीतैर्योगिभिरन्तश्चिरमृग्याम् ।
बालादित्यश्रेणिसमानद्युतिपुञ्जां
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ १ ॥

*லீலாலப்தஸ்தாபிதலுப்தாகிலலோகாம்*
*லோகாதீதைர்யோகிபிரந்தஶ்சிரம்ருக்யாம் ।*
*பாலாதித்யஶ்ரேணிஸமானத்யுதிபுஞ்சாம்*
*கௌரீமம்பாமம்புருஹாக்ஷீமஹமீடே ॥ 1 ॥*

லீலாலப்தஸ்தாபிதலுப்தாகிலலோகாம் = விளையாட்டாகவே எல்லா உலகங்களையும் பெற்றும் நிலைநிறுத்தியும் மறையச் செய்பவளும் லோகாதீதை: யோகிபி: = உலகப்பற்றினைக் கடந்து நிற்கும் யோகிகளாலே அந்த: = தம்முள்ளே சிரம்ருக்யாம் = வெகுகாலந் தேடிப் பெறத்தக்கவளும் பாலாதித்யஶ்ரேணிஸமானத்யுதிபுஞ்ஜாம் = இளஞ்சூரியர்கள் பலர் ஒன்ருகத் தோன்றினுற்போன்ற செவ்வொளிப் பிழம்பாயமைந்தவளும் அம்புருஹாக்ஷீம் = தாமரைக்கண்களையுடையவளும் அம்பாம் = தாயுமாய் விளங்கும் கௌரீம் = ஒளிவண்ணமுடைய தேவியை அஹம் = (வெள்ளை மனம் படைத்த பிள்ளைபோன்ற) நான் ஈடே = போற்றுகிறேன்.

"உலகனைத்தையும் ஈன்ற தாயானவள் கௌரீ தேவியின் வடிவிலே என்முன் தோன்றி, என்னையும் குளிரக் கடாக்ஷித்து, தன் உண்மைப் பெருமைகளை எனக்குத் தன் ரூபத்தாலேயே விளக்கி, என்னை ஆட்

கொள்கிருளாகையால், அவளையே நான் பல்காலும் போற்றுவேன் என்று சொல்" என்று நமக்காகத் தாமே ஆசரித்துக் காட்டி உபதேசிக்கிருர்கள் நமது பரமாசார்யர்கள். "உலகம் எதிலிருந்து தோன்றிற்ரே, எதினுல் நிலைபெற்றிருக்கிறதோ, எதினுள் இறுதியில் மறைந்துவிடுமோ, அதுவே பரப் பிரும்மம் என்று உபநிஷத்து உபதேசிக்கின்றது. தேவியே இம்மூன்று காரியங்களையும் செய்கிருள் ஆகையால், அவளையே பரப்பிரும்ம ஸ்வரூபிணி என்று கொண்டு யோகிகள் தங்கள் ஹ்ருதய கமலங்களிலே அவளுடைய திருவுருவத்தையே நிலைநிறுத்தப் பயில்கிருர்கள். நெடுங்காலம் முயன்று, இறுதியில் இருள் கவிந்திருந்த ஹ்ருதய குகையிலேயே ஆயிரம் பால சூரியங்கள் ஒருங்கே எழுந்தாற்போன்ற செவ்வொளிப் பிழம்பு வியாபித்திருப்பதைக் கண்டு பேரானந்தமடைகிருர்கள். அவர்களைப்போல நீங்கள் யோகாப்பியாசஞ் செய்யவேண்டாம். ஒவ்வொரு நாளும் எழுந்ததும் உடலையும் மனத்தையும் தூயவையாக்கிக் கொண்டு, ஆழ்ந்த பக்தியுடன் "கௌரீ தேவி! நீ எனக்கும் அன்னையாதலின், என்னை கடாக்ஷித்து ரக்ஷிக்காவிடில் உன்னை விடேன். 'போற்றி! போற்றி!' என்று வாய்விட்டுக் கூறி, உன்னுடைய கடாக்ஷம் என்மீது விழும்படி செய்வேன்" என்ருல், தேவியின் தாய் மனம் இளகிவிடும். உங்களை ரக்ஷித்தே தீர்வாள் என்று சுலபமான பக்திமார்க்கத்தை நமக்குக் காட்டியருளுகிருர்கள் ஆதிசங்கராசார்யர்களான பகவத்பாதர்கள்,

प्रत्याहारध्यानसमाधिस्थितिभाजां
नित्यं चित्ते निर्वृतिकाष्ठां कलयन्तीम् ।
सत्यज्ञानानन्दमयीं तां तनुरूपां
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ २ ॥

ப்ரத்யாஹாரத்யானஸமாதிஸ்திதிபாஜாம்
நித்யம் சித்தே நிர்வ்ருதிகாஷ்டாம் கலயந்தீம் ।
ஸத்யஜ்ஞானானந்தமயீம் தாம் தனுரூபாம்
கௌரீமம்பாமம்புருஹாக்ஷீமஹமீடே ॥ 2 ॥

ப்ரத்யாஹாரத்யான ஸமாதிஸ்திதி பாஜாம் = ஐம்பொறிகளை ஒடுக்கிச் சிந்தனை செய்து மனதைத் தெய்வத்தோடு ஒன்றச் செய்வதிலே நிலைபெற்றிருக்குந் தன்மையைப் பெற்றவர்களுடைய சித்தே = சித்தத்திலே நித்யம் = எப்பொழுதும் நிர்வ்ருதிகாஷ்டாம் = பரமானந்தத்தை கலயந்தீம் = அளிப்பவளாய் ஸத்யஜ்ஞானானந்தமயீம் = ஸத் சித் ஆனந்தம் ஆகிய மூன்றும் சேர்ந்த ஸ்வரூபிணியாய் தனுரூபாம் = ஸூக்ஷ்மமான மேனியை யுடையவளாய் விளங்கும் தாம் = அந்த அம்புருஹாக்ஷீம் = தாமரைக்கண்களை யுடையவளும் அம்பாம் = தாயுமாய் விளங்கும் கௌரீம் = ஒளிவண்ணமுடைய தேவியை அஹம் = (வெள்ளை மனம் படைத்த பிள்ளைபோன்ற) நான் ஈடே = போற்றுகிறேன்.

இந்திரியங்களைத் தியானத்தில் அமர்த்தி சமாதி நிலை பெற்றவர்களுக்கு எப்பொழுதும் பரமானந்தத்தை அளிக்கின்றதான சச்சிதானந்தப்பொருளே மிக மெல்லியதாய் மின்னற்கொடிபோன்று ஒளி வீசு

கின்ற வடிவு தாங்கி தேவியாக விளங்குகிறது. ஆனல் அவளுடைய அருளைப் பெற்று பரமானந்தத்தைப் பெறுவதற்கு சமாதி நிலையை நாடவேண்டாம். தினந்தோறும் காலையில் எழுந்ததும் மனதை தேவியினிடம் செலுத்தித் துதிசெய்தால் சமாதிநிலை தானகவே வந்துவிடும்; பரமானந்தத்தில் ஆழ்ந்திருக்கலாம் என்கிருர்கள் இந்தச் சுலோகத்திலே நமது பரமாசார்யர்கள்.

चन्द्रापीडानन्दितमन्दस्मितवक्त्रां
चन्द्रापीडालंकृतनीलालकभाराम् ।
इन्द्रोपेन्द्राद्यर्चितपादाम्बुजयुग्मां
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ ३ ॥

சந்த்ராபீடானந்திதமந்தஸ்மிதவக்த்ராம்
சந்த்ராபீடாலங்க்ருத நீலாலகபாராம் ।
இந்த்ரோபேந்த்ராத்யர்(ச்)சிதபாதாம்புஜயுக்மாம்
கௌரீமம்பாமம்புருஹாக்ஷீமஹமீடே ॥ 3 ॥

சந்த்ராபீடானந்தித மந்தஸ்மித வக்த்ராம் = பிறைச் சந்திரனைத் திருமுடியிலே சூடிக்கொண்டவரான பரமசிவனுருக்கு ஆனந்தம் அளிப்பதான புன்முறுவலோடு விளங்கும் திருமுக மண்டலத்தையுடையவளும் சந்த்ராபீடாலங்க்ருத நீலாலகபாராம் = சந்திரனுகிய முடிமாலையாலே அலங்கரிக்கப் பெற்றுச் செறிந்த கருங்கூந்தலையுடையவளும் இந்த்ரோபேந்த்ராத்யர்(ச்)சித பாதாம்புஜ யுக்மாம் = இந்திரன், இந்திரனுக்கும் இந்திர

A. No. 6315
R65 (இ)
நூலகம், கோவில்

னை திருமால் முதலியவர்களாலே அர்ச்சனை செய்யப் பட்ட திருவடித்தாமரையிணையை யுடையவளாயும் விளங்கும் அம்புருஹாக்ஷீம் = தாமரைக்கண்களை யுடையவளும் அம்பாம் = தாயுமான கௌரீம் = ஒளிவண்ணமுடைய தேவியை அஹம் = (வெள்ளை மனம்படைத்த பிள்ளைபோன்ற) நான் ஈடே = போற்றுகிறேன்.

பரம்பொருளாகி விளங்குவதற்கு அடையாளமாக பிறைச் சந்திரனை திருமுடியிலே தரித்துக்கொண்டு, அப்படியே திருமுடியிலே சந்திரனைக் கொண்ட பரமசிவனுருக்கும் புன்முறுவல்களாலே பரமானந்தத்தை யளிக்கும் தேவியின் திருவுருவத்தைக் கண்டு, இவளே நமக்கு வேண்டிய பதவிகளைத் தரவல்ல ஈசுவரியென்றுணர்ந்த இந்திரன் முதலான தேவர்கள் பலரும் தேவியின் திருப்பாதங்களிலே பூக்களால் அர்ச்சித்துத் தத்தமது பதவிகளை நிலைபெற்றிருக்கும்படி செய்துகொள்கிறார்கள்; ஆகையால் நீங்களும் அவர்களைப் பின்பற்றி தேவியின் அருளைப்பெற்று பேரின்ப வாழ்வு வாழுங்கள் என்று வாழ்த்தி இந்த சுலோகத்தை யருளுகிறார்கள்.

நாமரூபங் கடந்த பரம்பொருளின் வடிவமே தேவி; அவ்வடிவுகொண்டே பரம்பொருள் உலகங்களை ஆக்கல் அளித்தல் அழித்தல் என்னும் முத்தொழிலையும் நடத்துகின்றது. ஆகையால், தங்களை அப் பரம் பொருளிலே லயிக்கச் செய்வதற்கு முயலுகின்ற யோகிகள் தேஜோமயமான அவ்வடிவை நாடிச்சென்று தங்கள் ஹ்ருதயங்களிலே

அவளை நிலைபெற்று வீற்றிருக்கச் செய்கிறார்கள். தவம்புரிவோர்களும், ஐம்பொறிகளை அவித்து ஏகாக்ர சித்தமுடையவர்களாய், பரமானந்தத்தை இடைவிடாது பருக விரும்பி, 'ஸத் சித் ஆனந்தம் என்று சொல்லப்படும் பிரும்மமே தேஜோமயமான திருமேனி தாங்கி கௌரீதேவியாக ஒளிர்கின்றது' என்று உணர்ந்து அவளாலே பரமானந்தத்தின் பேரெல்லையை அடைந்து பேரின்பமுறுகிறார்கள்.

தேவர்கள் அனைவருக்கும் தலைவராகிய மகாதேவருக்கும் தன்னுடைய புன்முறுவலாலே பரமானந்தத்தை யருளுவோளாய், அப்பரம்பொருளினின்றும் வேறுபடாதவள் என்பதை அவருடைய திருமுடியிலே ஆதிராஜ்ய ஸூசகமாக விளங்கும் பிறைச சந்திரனைத் தன்னுடைய திருமுடியிலும் அமைத்துக் கொண்டிருப்பதாலே நன்கு விளக்குகின்றதைக் கண்டறிந்த இந்திரன் முதலான தேவர்கள் அவளுடைய பாத கமலங்களிலே எட்டுத்திக்கிலுமுள்ள புஷ்பங்களைக் கொணர்ந்து தூவி வழிபடுகிறார்கள். நீங்கள் யோகமோ, தவமோ, பூசனையோ புரியவேண்டாம். அதிகாலையிலே "தேவி! உன்னைப் போற்றுகிறேன்" என்று முழுமனதோடு தெரிவித்துக் கொண்டாற் போதும். உங்களுக்குப் படிப்படியாக வித்தையும் செல்வமும் பக்தியும் ஞானமும் மோக்ஷமும் கிடைக்கும் என்று மூன்று சுலோகங்களாலே கூறி, அடுத்த சுலோகத்திலே அவளை அக்ஷர வடிவினளாகத் தியானிக்கும் வழியை விளக்குகிறார்கள்.

आदिक्षान्तामक्षरमूर्त्या विलसन्तीं
भूते भूते भूतकदम्बप्रसवित्रीम् ।
शब्दब्रह्मानन्दमयीं तां तटिदाभां
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ ४ ॥

*ஆதிக்ஷாந்தாமக்ஷரமூர்த்யா விலஸந்தீம்*
*பூதே பூதே பூதகதம்பப்ரஸவித்ரீம் ।*
*ஶப்தப்ரஹ்மானந்தமயீம் தாம் தடிதாபாம்*
*கௌரீமம்பாமம்புருஹாக்ஷீமஹமீடே ॥ 4 ॥*

ஆதிக்ஷாந்தாம் = அகரம் முதலாக க்ஷகரம் இறுதியாகவுள்ள ஐம்பத்தொன்று அக்ஷரங்களையும் தன்னுடைய ஸ்வரூபமாகக் கொண்டவளும் அக்ஷர மூர்த்யா விலஸந்தீம் = (எல்லாப் பொருளும் பரம்பொருளோடு ஒன்றிலே லயித்திருக்கும் பிரளய காலத்திலும்) அழியாத தனி வடிவு கொண்டுவிளங்குபவளும் பூதே பூதே = சிருஷ்டிதோறும் பூதகதம்ப ப்ரஸவித்ரீம் = உயிர்த் தொகுதிகள் அனைத்தையும் தோற்றுவிப்பவளுமாகி ஶப்த ப்ரஹ்மானந்தமயீம் = சப்தப் பிரும்மம் என்று சொல்லப்படும பிரணவ வடிவினளாய் ஆனந்த மயமாகி தடிதாபாம் = மின்னற்கொடி போன்று ஒளிர்கின்றவளும் தாம் = வருணிக்க முடியாதவளும் அம்புருஹாக்ஷீம் = தாமரைக்கண்களை யுடையவளும் அம்பாம் = தாயுமாய் விளங்கும் கௌரீம் = ஒளிவண்ணமுடைய தேவியை அஹம் = (வெள்ளை மனம் படைத்த பிள்ளைபோன்ற) நான் ஈடே = போற்றுகிறேன்.

"ஓங்காரத்திலே மின்னற்கொடிபோல ஒளிருஞ் சோதியாகி, ஐம்பத்தொன்று எழுத்து வடிவங்களையும் ஊடுருவி நின்று, சிருஷ்டிதோறும் இவ்வுலகங்களையும் உயிர்களையும் தோற்றுவித்தருளும் தேவியே உன்னையும் தோற்றுவித்த தாய் என்று உணர்ந்து அவளைப் போற்றுவாயாக" என்று ஒளிவடிவாகத் தேவியைத் தியானஞ் செய்வதற்கு உதவுகிறார்கள் இந்தச் சுலோகத்தினாலே,

मूलाधारादुत्थितवीथ्या विधिरन्ध्रं
सौरं चान्द्रं व्याप्य विहारज्वलिताङ्गीम् ।
येयं सूक्ष्मात्सूक्ष्मतनुस्तां सुखरूपां
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ ५ ॥

மூலாதாராதுத்திதவீத்யா விதிரந்த்ரம்
ஸௌரம் சாந்த்ரம் வ்யாப்ய விஹாரஜ்வலிதாங்கீம் ।
யேயம் ஸூக்ஷ்மாத் ஸூக்ஷ்மதனுஸ்தாம் ஸுகரூபாம்
கௌரீமம்பாமம்புருஹாக்ஷீமஹமீடே ॥ 5 ॥

மூலாதாராத் = மூலாதாரச் சக்கிரத்தினின்றும் உத்தித வீத்யா = மேலே செல்லுகின்ற வழியிலே (சென்று) விதிரந்த்ரம் ஸௌரம் சாந்த்ரம் = பிரும்மரந்த்ரம், சூரிய கோணம், சந்திர கோணம் ஆகிய மூன்று பிரதேசங்களிலும் வ்யாப்ய = முழுவதும் வியாபித்து விஹாரஜ்வலிதாங்கீம் = விளையாட்டாகக் கொண்ட தேஜோமயமான அங்கங்களையுடையவளாயும் யா ஸூக்ஷ்மாத் ஸூக்ஷ்மதனு: தாம் = எவள் அதிஸூக்ஷ்மமாய்க் காணுதற்கரிய திருமேனியோடு விளங்குகிறாளோ அந்த

இயம் ஸ்வரூபாம் = இப்படிக் காட்சி தருகின்ற இன்ப வடிவினளும் அம்புருஹாக்ஷீம் = தாமரைக்கண்களை யுடையவளும் அம்பாம் = பராம்பிகையுமாக விளங்கும் கௌரீம் = ஒளிவண்ணமுடைய தேவியை அஹம் = நான் ஈடே = போற்றுகிறேன்.

எந்த சக்தி மூலாதாரத்திலே செயலற்றுக்கிடக்கிறளோ, அவளை ஸ்ரீவித்யோபாசனையாலே எழுப்பி மேனோக்கிச் செல்லும்படி செய்து ஆறு ஆதாரங்களையும் அவற்றுலே அமைந்த பிரதேசங்களையும் நன்கு வியாபித்து எங்கும் நிறைந்த தேஜோமயமாக்கிக் கொண்டால், இயற்கையிலே அதிஸூக்ஷ்மமாய் அமைந்த தேவியின் திருமேனி அகண்டாகாரமாய் ஸர்வ வியாபியாய் எப்பொழுதும் பேரின்பத்தைத் தருவதாகும். அத்தகைய தேவியை தியானஞ்செய்ய உதவுகிறார்கள் பரமாசார்யர்கள் இந்த சுலோகத்தாலே.

नित्यः शुद्धो निष्कल एको जगदीशः
साक्षी यस्याः सर्गविधौ संहरणे च ।
विश्वत्राणक्रीडनलोलां शिवपत्नीं
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ ६ ॥

நித்ய: ஶுத்தோ நிஷ்கல ஏகோ ஜகதீஶ:
ஸாக்ஷீ யஸ்யா: ஸர்கவிதௌ ஸம்ஹரணே ச ।
விச்வத்ராணக்ரீடநலோலாம் சிவபத்நீம்
கௌரீமம்பாமம்புருஹாக்ஷீமஹமீடே ॥ 6 ॥

நித்ய: ஶுத்த: நிஷ்கல: ஜகதீஶ: ஏக: = என்றுமுள்ள நித்தியப்பொருளாய், வேறொன்றுங் கலவாததாலே தூய்மையுடையதாய், பாகுபாடு ஒன்றுமில்லாத முழுப்பொருளாய், இரண்டாவது என்று சொல்வதற் குரிய பொருள் ஒன்றும் இல்லாத தனிப்பொருளாய் விளங்கும் பரம்பொருள், உலக மனைத்திற்கும் ஈசுவர னுய் அவற்றையெல்லாம் ஆக்கி அளித்துத் தன்னிலே லயிக்கச்செய்கின்றதாயினும், யஸ்யா: = எவளுடைய ஸர்க விதௌ ஸம்ஹாரணே ச ஸாக்ஷீ = சிருஷ்டி தொழி லிலும் ஸம்ஹாரத் தொழிலிலும் காண்போனுகிச் செயலின்றி இருக்கிறதோ ஶிவபத்னீம் = அந்தப் பரம்பொருளின் ஸஹதர்மசாரிணியாய் விஶ்வத்ராண க்ரீடனலோலாம் = உலகமனைத்தையும் காப்பதையே விளையாட்டாகக் கொண்டு இன்புறுகின்றவளான அம்புருஹாக்ஷீம் = தாமரைக்கண்களை யுடையவளும் அம்பாம் = தாயுமாய் விளங்கும் கௌரீம் = ஒளிவண்ண முடைய தேவியை அஹம் = (வெள்ளை மனம் படைத்த பிள்ளை போன்ற) நான் ஈடே = போற்றுகிறேன்.

சிருஷ்டிக்கு முன்பு உள்ளது நித்யமாய்த் தூய தாய்ப் பிரிவுருததாய் ஒன்ருயுள்ள பரம்பொருள். அப் பரம்பொருளே பரமசிவனுர். அக்காலத்திலும் பரமசிவனுர் பத்தினியோடுதான் விளங்குகிருர். அவர் உலகங்களைக் சிருஷ்டிக்க வேண்டும் என்று நினைக் கிருர். அந்த நினைவை அறிந்து, தேவி சிருஷ்டித் தொழிலை மேற்கொள்கிருள். ஜகதீச்வரரான பரம ரும் அந்தக் காரியத்தைப் பார்த்துக்கொண் டிருக்கிருர். அக்காலத்திலே அவரைத் தவிர

வேறு இருவரும் இல்லையன்றோ? அவருடைய பார்வையே தேவீ சிருஷ்டி செய்வதற்குக் காரணமாகின்றது. பதியினுடைய சான்னித்தியமன்றோ பத்தினியை சக்தியுடையவளாக்குகின்றது. சிருஷ்டித்த பின்பும் பரமேசுவரர் சுகமாக இருக்கிறார். தேவீக்கு இவ் விளையாட்டு போதும் என்று தோன்றும் வரை ஜகத் ரக்ஷணமாகிய விளையாட்டிலே அவளை ஈடுபடும்படி விட்டுவிடுகிறார். பின்புதான், அவளைக்கொண்டு சம்ஹாரத் தொழிலை நடத்தி, மீண்டும் அவளும் தானுமே யாகிவிடுகிறார்கள். இந்த ஸம்ஹாரத் தொழில் எப்பொழுதோ நடக்கப்போவது. அதைப்பற்றிய கவலை நமக்கு இல்லை. ஆனால், இடைக்காலத்திலே தேவீ உலகனைத்தையும் அளித்துக் காப்பாற்றுகின்ற விளையாட்டிலே, நாமும் அவளுக்கு இன்பமூட்டுகின்ற மக்களாவோம். "அம்மா! அம்மா! என்னைப் பார்த்து எனக்கு இன்பங்களைத் தா" என்று வேண்டுவோம். நாம் செய்யவேண்டிய காரியத்தை இவ்வாறுவிளக்கிக் காட்டுகிறார்கள் இந்த ஆறுவது சுலோகத்திலே.

यस्याः कुक्षौ लीनमखण्डं जगदण्डं
भूयो भूयः प्रादुरभूदुत्थितमेव ।
पत्या सार्धं तां रजताद्रौ विहरन्तीं
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ ७ ॥

யஸ்யா: குக்ஷௌ லீனமகண்டம் ஜகதண்டம்
பூயோ பூய: ப்ராதுரபூதுத்திதமேவ
பத்யா ஸார்தம் தாம் ரஜதாத்ரௌ விஹரந்தீம்
கௌரீமம்பாமம்புருஹாக்ஷீமஹமீடே ॥ 7 ॥

யஸ்யா: = எவளுடைய குக்ஷெள = வயிற்றிலே அகண்டம் ஜகதண்டம் = முட்டைவடிவமான ஜகத்து முழுவதும் லீனம் = பிரளயகாலத்திலே ஒடுங்கியிருந்ததோ பூயோ பூய: = மீண்டும் மீண்டும் உத்திதம் = மேலே எழுந்து ப்ராதுரபூத் எவ தோன்றிற்று என்பது உறுதியோ பத்யா ஸார்தம் = பதியோடுகூட ரஜதாத்ரௌ = (தானே சிருஷ்டித்தவற்றுள் ஒன்ருன) வெள்ளி மலையிலே விஹரந்தீம் = ஜகத்து முழுவதையும் காக்கின்ற விளையாட்டை மேற்கொண்டு இன்புறுகிருளோ தாம் = அப்படிச் சிறந்த அம்புருஹாக்ஷீம் = தாமரைக்கண்களை யுடையவளும் அம்பாம் தாயுமாய் விளங்கும் கௌரீம் = ஒளிவண்ணமுடைய தேவியை அஹம்=(வெள்ளை மனம் படைத்த பிள்ளை போன்ற) நான் ஈடே போற்றுகிறேன்.

பரம கருணமூர்த்தியான எந்தத் தேவியின் திருவயிற்றிலே, இந்த உலகங்களும் உயிர்களும் எல்லாம் பிரளயந்தோறும் செயலற்று ஒடுங்கிச் சிரமபரிகாரஞ் செய்துகொண்டு, மீண்டும் ஒவ்வொரு சிருஷ்டித் தொடக்கத்திலும் அவள் வயிற்றிலே பிறந்த மக்களாகத் தோன்றுகின்றனவோ, அந்தத் தாயின் கருணை எல்லையற்றது. தாயாரைத் தவிர வேறு யார்தாம், வயிற்றிலே வைத்துக் காத்து பிறந்த பின்பும் மக்களைக் காக்குந் தொழிலிலே ஈடுபடுவார்கள்? தான் படைத்த மக்களுக்கு இன்பமூட்டுவதிலே முனைந்து எந்தக் குழந்தைக்கு என்னவேண்டும் என்று ஜாக்கிரதையாக இருந்து உதவுகின்றவளாய், அவர்கள் கண்ணுற் காணக்கூடிய பிரபஞ்சத்திலேயே தோன்றி

நிர்மலமான வெள்ளி மலையிலே பரமசிவனுடைய அருகிலே அமர்த்திக்கொண்டு காட்சியளிக்கின்றாள் கௌரீதேவி. அவளை நாம் இருக்கின்ற இடத்திலிருந்தே தினந்தோறும் ஸ்மரித்தாற் போதும்; அவள் உடனே தாயன்புடன் நம்முன் தோன்றி நமக்கு வேண்டியவற்றையெல்லாம் தருவாள் என்கிறார்கள்.

यस्यामोतं प्रोतमशेषं मणिमाला-
सूत्रे यद्वत्क्वापि चरं चाप्यचरं च ।
तामध्यात्मज्ञानपदव्या गमनीयां
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ ८ ॥

யஸ்யாமோதம் ப்ரோத மஶேஷம் மணிமாலா-
ஸூத்ரே யத்வத்க்வாபி சரம் சாப்யசரம் ச ।
தாமத்யாத்மஜ்ஞான பதவ்யா கமனீயாம்
கௌரீமம்பாமம்புருஹாக்ஷீமஹமீடே ॥ 8 ॥

அஶேஷம் சரம் ச அபி அசரம் ச = ஒன்றும் விடுபடாத படியாகச் சரப் பொருள் அசரப் பொருள் ஆகிய எல்லாப் பொருளும் யஸ்யாம் = எவளுடைய வடிவத்திலே மணி–மாலா–ஸூத்ரே யத்வத் க்வ அபி = மணி மாலை கோக்குங் கயிற்றிலே எப்படியோ அது போல எங்கெங்கேயோ ஓதம் ப்ரோதம் = நெய்யும் போது ஊடும் பாவும் போலே குறுக்காகவும் நெடுக்காகவும் பின்னப் பெற்றுள்ளதோ தாம = அந்த அத்யாத்ம ஜ்ஞான பதவ்யா = ஆத்மாவைப் பற்றியதான ஞான நிலையாலே (மட்டுமே) கமனீயாம் = நன்கறிந்து

அடைதற்குரியவளுமான அம்புருஹாக்ஷீம் = தாமரைக் கண்களை யுடையவளும் அம்பாம் = தாயுமாய் விளங்கும் கௌரீம் = ஒளிவண்ணமுடைய தேவியை அஹம் = (வெள்ளை மனம் படைத்த பிள்ளை போன்ற) நான் ஈடே = போற்றுகிறேன்.

செசவு செய்வோர் நூலின் சில பகுதிகளை ஊடாகவும் சில பகுதிகளை பாவாகவும் செலுத்தித் துணியாகச் செய்கிறார்கள். மணிகளை மாலையாகக் கோப்போர் மணிகளை எப்படிக் கோத்தால் நல்ல மாலையாகுமோ அப்படிக் கோப்பார்கள். இவர்களைப் போலவே, தேவியும் சரப் பொருள் அசரப் பொருள் ஆகியவற்றை யெல்லாம் வாழ்க்கை யென்னும் மணி மாலையாகவும் நல்லாடை யாகவும் அமைக்கிறாள். அவள் எப்படி அமைத்தால் என்ன? நம்முடைய ஆத்மாவிற்கும் அவளுக்கும் என்ன தொடர்பு என்று தெரிந்து கொண்டு, அந்த ஞானத்தாலே பரமானந்தத்தைப் பெறுவோம். அதற்கு மூதற்படியாக, அவளை நம்முடைய அன்னை யென்றும், அவளுடைய கமலக் கண்கள் நம் மீது இரக்கங் கொண்டு நம்மைக் கடாக்ஷிப்பதற்கு விரைகின்றன என்றும், அறிந்து அவள் செவிசாய்த்துக் கடாக்ஷிக்குமாறு அவளைப் போற்றிப் பாடுவோம் என்கிறார்கள் இந்தச் சுலோகத்திலே.

“பாடுவோம் என்றால், அவள் தான் தன் நாயகனோடு வெள்ளி மலையிலன்றோ இருக்கிறாள்? அவள் செவியிற் படுமாறு எப்படிப் பாடுவது?” என்று தியக்கமுற வேண்டாம். அவள் சக்தி வடிவங்கள் பல

வற்றையுந் தாங்கி எல்லா உலகங்களிலும் தன் மூர்த்திகளைப் பரப்பி வைத்திருக்கிறாள். உண்மையில் ஒருத்தியே யானாலும், இவ்வாறு பல வடிவங்கள் ஏற்றுத் திருவிளையாடல் புரிந்து அனைவரையும் தன்னுடைய பரந்த திருக்கண்ணோக்கங்களுக்குள் அகப்படுத்திக் கொண்டு, அவர்களை வணங்கச் செய்து, அவர்கள் வணக்கங்களை ஒரு வியாஜமாகக் கொண்டு அவர்களுக்குரிய சகல மங்களங்களையும், கற்பகக் கொடி அளிப்பது போல், அளித்துதவுவதற்கே யாகும்" என்று அடுத்த சுலோகத்தாலே நம்மைத் தேற்றுகிறார்கள்.

नानाकारैः शक्तिकदम्बैर्भुवनानि
व्याप्य स्वैरं क्रीडति येयं स्वयमेका ।
कल्याणीं तां कल्पलतामानतिभाजां
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ ९ ॥

நாநாகாரை: பக்திகதம்பைர் புவநானி
வ்யாப்ய ஸ்வைரம் க்ரீடதி யேயம் ஸ்வயமேகா ।
கல்யாணீம் தாம் கல்பலதாமாநதிபாஜாம்
கௌரீமம்பாமம்புருஹாக்ஷீ மஹமீடே ॥ ॥ 9 ॥

நாநாகாரை: = பல்விதங்களான வடிவங்களைக் கொண்ட பக்திகதம்பை: = சக்திக் கூட்டங்களாலே புவநானி = உலகங்களை (யெல்லாம்) வ்யாப்ய = வியாபித்துக் கொண்டு எங்கும் பரவி நின்று யா ஏகா = ஒரே பொருளான எவள் ஸ்வயம் = தானு

கவே ஸ்வைரம் = தன்னிச்சைப் படியே க்ரீடதி = திருவிளையாடல் புரிகிறுளோ ஆநதிபாஜாம் = திருவடி தொழுது வணங்குவோர்க்கு கல்பலதாம் = (வேண்டிய பொருட்களை யெல்லாம் அளிக்கின்ற) கற்பகக் கொடியாய் விளங்குகின்றவளும் தாம் கல்யாணீம் = அந்த மங்கள மூர்த்தியும் அம்புருஹாக்ஷீம் தாமரைக் கண்களையுடையவளும் அம்பாம் = தாயு மாய் விளங்கும் கௌரீம் = ஒளி வண்ணமுடைய தேவியை அஹம் = (வெள்ளை மனம் படைத்த பிள்ளை போன்ற) நான் ஈடே போற்றுகிறேன்.

"உலகோர் அனைவரும் தன்னை எளிதிலே துதித்துத் தொழுது உய்வதற்காக பராசக்தியானவள் தன் மூர்த்திகளைப் பலவாருக அமைத்துக்கொண்டு நாடெங்கும் ஊர்தோறும் ஊரிலுள்ள இடங்கள் பலவற்றிலும் அமர்ந்து தன்னிச்சைப்படி மக்களைக் காப்பதாகிய திருவிளையாடலைப் புரிந்துகொண்டிருக்க, நீ சும்மா இருப்பதோ? தெய்வச் சக்தி வாய்ந்த சர பொருள் அசரப்பொருள் எல்லாம் தேவியின் வடிவங்கள் என்று நன்குணர்ந்து, அத்தேவியை வழிபட்டு உய்வாயாக; தேவி அந்த வடிவத்திலே அமர்ந்திருந்து, கற்பகக் கொடிபோன்று, நீ வேண்டியவற்றைத் தருவாள்" என்று உபதேசித்து அவ்வாறே தாமும் அனுஷ்டித்துக் காட்டுகிறுர்கள். ஆனல் "இவ்வடிவுடைய தெய்வமே உண்மைத் தெய்வம் என்று நீ பெற்ற பேரருளைக்கொண்டு நிச்சயிக்காமல், மற்றைப் பல்வேறு வடிவுகளிலும் தேவியே ஊடுருவி நின்று அருள்

பாலிக்கிருள் என்று உணர்ந்து, ஒருவரோடு ஒருவர் பிணக்கமுருது வாழவேண்டும்" என்று எச்சரிக்கிருர்கள். உண்மையிலே தெய்வம் ஒன்றே; அதுதான் பராசக்தி, அவளுடைய மூர்த்தங்களே பற்பல தெய்வங்களும்; அவற்றுள் யாதேனும் ஒன்றைப் பராசக்தியின் வடிவாகக்கொண்டு வழிபட்டுப் போற்றித் திருவருளை பெறலாம்" என்று தேவியின் ஸௌலப்யத்தை விளக்குகிருர்கள்.

आशापाशक्लेशविनाशं विदधानां
पादाम्भोजध्यानपराणां पुरुषाणाम् ।
ईशामीशार्धाङ्गहरां तामभिरामां
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ १० ॥

ஆஶாபாஶக்லேஶவிநாஶம் விததாநாம்
பாதாம்போஜத்யானபராணாம் புருஷாணாம் ।
ஈஶாமீஶார்தாங்கஹராம் தாமபிராமாம்
கௌரீமம்பாமம்புருஹாக்ஷீமஹமீடே ॥ 10 ॥

ஆஶாபாஶக்லேஶவிநாஶம் = ஆசைகளாகிய கட்டுகளினாலே உண்டாகின்ற துன்பங்களை (அக்கட்டுகளைப் பொருட்படுத்தாது) அவற்றினின்று விடுபடுவதால் அழிப்பதாகிய தொழிலை விததாநாம் = செய்து முடித்தவர்களாய் பாதாம்போஜத்யானபராணாம் = தேவியினுடைய திருவடித் தாமரைகளைத் தியானஞ் செய்வதையே தொழிலாகக் கொண்ட புருஷாணாம் = மனிதர்களுக்கு ஈஶாம் = பரமேசுவரியாகவும் ஈஶார்

தாங்கஹராம் = பரமேசுவரருக்குரிய அங்கங்களிலே நேர்பாதியை அபகரித்துத் தன்னுடையதாக்கிக் கொண்டவளுமாய் அபிராமாம் தாம் = கவர்ச்சி மிக்க அழகு வாய்ந்தவளான அந்த அம்புருஹாக்ஷீம் = தாமரைக் கண்களையுடையவளும் அம்பாம் = தாயுமாய் விளங்கும் கௌரீம் = ஒளி வண்ணமுடைய தேவியை அஹம் = (வெள்ளை மனம் படைத்த பிள்ளை போன்ற) நான் ஈடே = பாற்றுகிறேன்.

கௌரீ தேவியாகிய நமது அன்னை தான் பரம் பொருளின் வடிவமே என்பதைப் பரமேசுவரரின் திரு மேனியின் நேர்பாதியைத் தன்னுடையதாக்கிக் கொண்டு அவரருகிலேயே அமர்ந்திருப்பதாலேயே விளக்குகிறாள். ஆதலால், இவளே நமக்குப் பரம் பொருள், நம்மையாட்கொள்வதற்குரியவள். இந்த உண்மையை அறிந்த பெரியோர்கள் இவளது திருப் பாதங்களையே எப்பொழுதும் தியானித்த வண்ணம் இருக்கிறார்கள். அந்தத் தியானத்தாலேயே அவர் கள் தங்களுக்கு முன்னுளில் இருந்த ஆசாபாசங்களை யெல்லாம் ஒழித்துவிட்டார்கள். அதற்குமுன், நம் மைப்போலவே அவர்களும் இருந்தார்கள். ஆகை யால், நாமும் ஆசைவாய்ப்பட்ட சிந்தையராயினும் பிரதி தினமும் எழுந்திருந்ததும் தேவி பராசக்தி யைத் தியானஞ் செய்து, பிறகு நம்முடைய காரியங் களைக் கவனிப்போமானல் நம்முடைய பாசங்கள் அனைத்தும் தேவியின் திருவடி மகிமையாலே நசித் துப்போம், ஆகையால், ஆசைகளாகிய தளைகளாலே

துன்புறுதவர்களான பரம பக்தர்கள் வழிபடுகின்ற தேவியின் சரணங்களை நாம் ஸ்மரிக்கலாமோ என்று பயப்படாமலும், "தேவி பரம்பொருளாவளோ, ஆக மாட்டாளோ" என்று ஐயுறுமலும் "இவள் என்னைப் பெற்ற தாயாதலால் எனக்கு இனியள்; என்னைக் கைவிடமாட்டாள்" என்ற திட நம்பிக்கையோடு அவளை வழிபடுங்கள் என்று கூறித் தாமும் வழிபட்டுக் காட்டுகிறுர்கள் ஸ்ரீ பகவத் பாதர்கள்.

முடிவிலே, பலச்ருதியாகப் பின்வருமாறு கூறி, நமக்கு ஊக்கமளிக்கிறுர்கள்.

प्रातः काले भावविशुद्धः प्रणिधाना-
द्भक्त्या नित्यं जल्पति गौरीदशकं यः ।
वाचां सिद्धिं संपदमग्र्यां शिवभक्तिं
तस्यावश्यं पर्वतपुत्री विदधाति ॥ २२ ॥

ப்ராத: காலே பாவவிஶுத்த: ப்ரணிதாநா-
பக்த்யா நித்யம் ஜல்பதி கௌரீதஶகம் ய: ।
வாசாம் ஸித்திம் ஸம்பதமக்ர்யாம் ஶிவபக்திம்
தஸ்யாவஶ்யம் பர்வதபுத்ரீ விதாதி ॥ 11 ॥

ய: = எவன் நித்யம் = எந்நாளும் ப்ராத: காலே = விடியற் காலத்திலே ப்ரணிதானத் = விடாமுயற்சியாலே பாவவிஶுத்த: = தூய எண்ணங்களையுடையவனுகி பக்த்யா = பக்தியோடு கௌரீதஶகம் = கௌரீ தேவியைப் போற்றுவதான இந்தப் பத்துப் பாடலையும் ஜல்பதி = வாய்விட்டுக் கூறுகிறுனே [ஸ: = அவன்

எத்தகைய நீசனாயினும் குணக்கேடனாயினும் கெட்ட நடத்தையுடையவனாயினும்] தஸ்ய = அவனுக்கு வாசாம் ஸித்திம் = சொன்ன வார்த்தைகள் பலிக்கும்படியான வாக்சித்தியையும் ஸம்பதம் = செல்வத்தையும் அக்ர்யாம் ஶிவ பக்தியும் = தலை சிறந்த சிவபக்தியையும் பர்வதபுத்ரீ = மலைமகளான தேவி அவஶ்யம் = கட்டாயமாக விததாதி = கொடுத்துதவுகிறாள்.

ஆகையால், இந்த கௌரீதஶகம் என்னும் ஸ்துதியை இளமை முதற்கொண்டே பிரதிதினமும் சொல்லவேண்டும். அப்பொழுது தேவியானவள் முதலில் முதிர்ந்த கல்விப் பயனை அளித்து, பின்பு தான் கற்ற கல்வியின்படி நிற்பதற்கு உதவுஞ் செல்வத்தையும் தந்து, கல்வியையும் செல்வத்தையும் உபயோகித்து பக்தி மார்க்கத்திலே சென்று பரமனுடைய திருவடிகளை அடைவதற்குத் துணைபுரிவாள். "தெரியேன் பாலகனாய்ப் பல தீமைகள் செய்துவிட்டேன், பெரியேன் ஆயினபின் பிறர்க்கே உழைத்து ஏழையானேன் என்று வருந்துவோர்களும், சென்றதற்கு அழிவுறாத மனத்தினராய்த் தேவியைச் சரண் புகுந்து, அவளுடைய சரணங்களை விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டு பக்தியோடு ஸ்துதி செய்தால் அவர்களும் வாய்த் தூய்மையும் செல்வமும் பெற்று சிவநேயச் செல்வர்களாக விளங்குவார்கள்; இது நிச்சயம்" என்று ஸ்ரீ சங்கர பகவான் இந்த கௌரீதஶகத்திலே உறுதி மொழி கூறுகிறார். அவர்களது திருவருளை எல்லோரும் பயன்படுத்திக்கொண்டு உய்வார்களாக.

எமது சொந்த ப்ரசுரங்கள்

ஸ்ரீமான் V. நாராயணன், M.A., M.L.

அவர்களால் எழுதப்பட்ட

| | |
|---|---|
| லலிதா பஞ்சரத்னம் | 0-5-0 |
| சாரதா புஜங்கப்ரயாதாஷ்டகம் | 0-8-0 |
| ஆனந்தலஹரீ | 0-8-0 |
| ஸப்த ஸ்துதி: | 0-5-0 |

கிரி ப்ரஸ், திருவல்லிக்கேணி, சென்னை.